# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**43/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. தங்கமோகன் | ஊர் | : | மாதாகோட்டை |
| க.பெ. | : | திரு. பெரியசாமி | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 62 | தொழில் | : | |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-7ஆம் நாள் **பி.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 1ஆம் பிரதிவாதி. சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 26.12.1995 தேதியிட்ட பெரியசாமி அவர்களால் பாஸ்கரன் என்பவருக்கு எழுதிகொடுத்த பதிவு கிரைய ஒப்பந்தம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.1** ஆகும். 24.12.1996 தேதியிட்ட பெரியசாமி அவர்களால் பாஸ்கரனுக்கு எழுதி கொடுக்கப்பட்ட கால நீட்டிப்பு ஒப்பந்த கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.2** ஆகும். 25.7.1996 தேதியிட்ட பெரியசாமி அவர்களால் ஆறுமுகத்திற்கு எழுதிகொடுக்கப்பட்ட பதிவு பெந்தக கடன் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.3**ஆகும். 30.3.2000 தேதியிட்ட ஆறுமுகம் அவர்களால் 1 மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்ட பதிவு பெந்தக கடன் ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.4** ஆகும். தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண் 14/1997 ன் உத்தரவு மற்றும் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.5**ஆகும். தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண் 195/2004ல் நிறைவேற்று மனு எண் 125/2008 மற்றும் அதன் உத்தரவு

சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.6** ஆகும். 21.7.2003 தேதியிட்ட எல்ஜசி ஹ வுசிங் பைனான்ஸ் நிறுவனம் 1ஆம் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்காக கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.7**ஆகும். 24.6.2003 தேதியிட்ட எல்ஜசி ஹ வுசிங் பைனான்ஸ் நிறுவனம் 1ஆம் பிரதிவாதிக்கு கடன் வழங்குவதற்காக செலுத்தப்பட்ட நடைமுறை சலவுகளுக்கான ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.8** ஆகும். எல்ஜசி ஹ வுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் வாங்கிய கடனை 1ஆம் பிரதிவாதி திருப்பி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை 33) தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.9** ஆகும்.

**குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.07 17:10:20 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**